# வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை
# COVENANT OF PROMISE

**அறிமுகம்**

தமது நித்திய ராஜ்யத்தில் பிள்ளைகளை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவுசெய்யும்படி தேவன் மேற்கொண்ட மற்றொரு பிரதான நடவடிக்கையை இப்பாடத்தில் காண்போம். நோவாவின் காலத்தில் உண்டானது போன்ற நெருக்கடியான சூழ்நிலை மறுபடியும் உண்டானதால், தேவன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். தேவனுடைய உடன்படிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு தேவையான விசுவாசத்தோடு ஒரு சிலர் மட்டுமே பூமியில் வாழ்ந்துகொண்டிருந்த வேளையில், இந்த நெருக்கடியான சூழ்நிலை உண்டானது. தேவன் ஆபிரகாமோடும் அவன் சந்ததியாரோடும் செய்துகொண்ட உடன்படிக்கை 4 ஆயிரம் ஆண்டுகளையும் கடந்து நிலைத்திருப்பது எப்படி என்பதை புரிந்துகொள்ளச் செய்வதே இப்பாடத்தின் நோக்கம் ஆகும். தேவனுடைய மக்கள் ஆபிரகாமுடைய ஆவிக்குரிய சந்ததியாராய் இருக்கிறார்கள். சகல தேசத்தாரையும் ஆசீர்வதிக்கும்படியாய் தேவன் ஆபிரகாமின் சந்ததியைக் குறித்துச் சொன்ன வாக்குத்தத்தமானது எல்லா இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும் "கிறிஸ்துவுக்குள்ளான" ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கிறது. *எபிரெயர் 6:13-20.* கிறிஸ்துவுக் குள்ளான ஆசீர்வாதங்கள் நமது விசுவாசத்தோடு ஒன்றிணைந்து, தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் நித்திய ஜீவனுக்குரிய நமது நித்திய சுதந்தரமாய் இருக்கிறது. *மத்தேயு 19:29; 25:34; எபேசியர் 1:13,14; 1 பேதுரு 1:3-5.*

**பாடம்**

இது ஒரு சரித்திரப் பாடம் அல்ல, என்றாலும் தேவனுடைய பிரதான நடவடிக்கைகள் ஒவ்வொன்றின் காரணத்தையும் சீராக புரிந்துகொள்ள, சரித்திரத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து நமது பாடத்தை ஆரம்பிக்க வேண்டியது அவசியம். தேவனுக்கும், ஆபிரகாம்

சாராய் என்ற தம்பதிக்கும் இடையிலான உறவு ஆபிரகாமின் சந்ததியாகிய மரியாள் என்ற கன்னிகைக்கு இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே ஆரம்பமானது. *லூக்கா 1:30.* இவர்கள் ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தில் வாழ்ந்துவந்தார்கள். இது தற்கால அரேபியாவைக் குறிக்கிறது. ஆபிராம் தன் தகப்பன் தேராகோடே வாழ்ந்துவந்தான். இந்த தேராகு விக்கிரகங்களை வணங்குபவனாய் இருந்தான். *ஆதி. 11:27-31; யோசுவா 24:2.* ஆபிராம் பிறந்தது முதல் அடைக்கப்பட்டிருந்த "வாழ்க்கை பெட்டியிலிருந்து" தன்னை விடுவித்துக்கொண்டான். ஆபிராம், சாராய், லோத்து ஆகியோர் மற்ற தெய்வங்களை விட்டுவிட்டு, தேவனை அறிந்துகொள்ளவும் அவர் மீது விசுவாசம் வைக்கவும் அவர் எப்படி உதவிசெய்தார் என்று நமக்குத் தெரியவில்லை. இவர்கள் வாழ்நாட்காலத்தில், நோவாவின் காலத்தில் உண்டானது போன்ற நெருக்கடியான சூழ்நிலை மறுபடியும் உண்டானது என்பதை நாம் தெரிந்துகொள்கிறோம். தேவன் நோவாவோடும், அவன் குமாரரோடும், அவர்கள் குடும்பங்களோடும் செய்திருந்த உடன்படிக்கைகளின் மீது உலகெங்கிலும் இருந்த மக்கள் விசுவாசம் இல்லாதிருந்தார்கள்.

ஆபிரகாம் ஊர் பட்டணத்திலிருந்து அழைக்கப்படுவதற்கு முன்பு, நோவாவின் காலத்திற்குப் பின்னர் பூமியில் பெருகின மக்களுடைய நடத்தை எப்படி இருந்தது என்பதை தெரிந்துகொள்வதற்கு நமக்கு ஒரே ஒரு சரித்திர ஆதாரம் மட்டுமே இருக்கின்றது. அவர்கள் தங்களுடைய சொந்த ஞானத்தின்படி "சிநெயார் தேசத்திலே சமபூமியைக் கண்டு" தங்களுக்குப் பேர் உண்டாகப்பண்ணும்படியாய் வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தைக் கட்ட முயற்சிசெய்தார்கள். *ஆதி. 11:1-9.* இங்கு நாம் கவனிக்கவேண்டிய சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இன்று பூமியில் உள்ள மிக உயர்ந்த கோபுரம் இதே புவியியல் பகுதியில் தான் கட்டப்பட்டு உள்ளது. இந்த கோபுரம் இதற்கு அடுத்த இடத்தில் உள்ள உயரமான கோபுரத்தை விட 320 மீட்டர்கள் உயரமானது. இதன் மொத்த உயரம் 830 மீட்டர். இது துபாயில் உள்ளது (UAE). இந்த சிநெயார் தேசத்து மக்கள் தங்களுடைய இயல்பான தேவைகளைச் சொந்த ஞானத்தின்படி





நிறைவுசெய்துகொள்ள வகைதேடினார்கள். "வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தை " கட்ட வேண்டும் என்ற அவர்களுடைய குறிக்கோள் நிறைவேறாதபடி தேவன் குறுக்கிட்டு, ஒரு பாஷையை பல பாஷைகளாக்கி தடுத்து நிறுத்தினார். அவர்கள் பாதுகாப்புக்கென்று தேவன் அவர்களுக்குள் கொடுத்திருந்த உள்ளுணர்வை திருப்திப்படுத்துவதில் அவர்கள் "மன நிலை" எப்படி இருந்தது என்பதை இங்கு நாம் அறிந்துகொள்கிறோம்.

நாமெல்லாரும் நம்முடைய இயல்பான தேவைகளான பாதுகாப்பு, சமூக உறவு, எதிர் பாலினத்தவருடனான உடலுறவு மற்றும் மகிமையையும், கனத்தையும் கொண்டு வரக்கூடிய சாதனைகள் ஆகியவற்றில் திருப்தியடைவதற்கு நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதிலேயே நமது நேரத்தையும், சக்தியையும் அதிகமாகப் பயன்படுத்துகிறோம். மகிமை என்ற வார்த்தை **டோக்ஸா (Doxa)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "நல்ல விதமாகக் காட்சியளித்தல்" என்பதே இதின் அர்த்தம். நாம் மற்றவர் முன்பு எப்போதும் நல்ல விதமாகக் காட்சியளிக்கவே முயற்சிக்கிறோம். நமது மகிமையின் தேவையை இவ்விதமாக நாம் திருப்திசெய்துகொள்கிறோம். உலகெங்கிலும் உள்ள மக்கள் பிறந்தது முதல் இந்த உடலில் வாழும்போது இயல்பான சரீரத் தேவைகளை எப்படி தேடுகிறார்களோ, அப்படிப் போலவே புகழ்ச்சி, கனம், மகிமை ஆகியவற்றையும் தேடுகிறார்கள். இந்த தேவைகளை திருப்திசெய்துதரக்கூடிய தேவனுடைய உடன்படிக்கைளை அறியாததினால் அல்லது அவைகள் மீது விசுவாசம் இல்லாததினால், இந்தத் தேவைகளை திருப்திசெய்துகொள்ள சொந்த ஞானத்தின்படி முயற்சி செய்கிறார்கள். தேவனுடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசம் இல்லாத சந்ததிகள் வாழ்ந்திருந்த போதிலும், நோவா, ஆபிரகாம், மோசே போன்ற பக்தியுள்ளவர்களும் இதே பூமியில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை தேவன் நமக்குத் தெரிவிக்கின்றார். இந்த ஒவ்வொரு நெருக்கடியான சூழ்நிலையிலும் தேவன் மீது விசுவாசம் கொண்ட ஒரு சிலரை காப்பாற்ற தேவையான நடவடிக்கையை அவர் எடுத்திருக்கின்றார். தமக்கும் அவர்களுக்கும் மகிமை உண்டாகும்படியாகவும், எதிர்கால சந்ததிகளில்

தமது படைப்பின் நோக்கம் நிறைவேறும்படியாகவும் அவர் இப்படிச் செய்தார். இது ஒரு பிதா, குமாரன் உறவாக இருக்கின்றது. இந்த உறவின் பயனாக இருவருக்குமே மகிமை உண்டாகவேண்டியது அவசியம்.

“தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்” என்று இயேசு கேட்டார். *யோவான் 5:44.* மற்றவர்களிடம் மகிமையைத் தேடுவதற்காக இயேசு அவர்களைக் கண்டிக்கவில்லை. அவருடைய கேள்வி இதுதான் : தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய பிள்ளைகளாக வாழக்கூடிய நித்திய புகழ்ச்சியை உங்களுக்குத் தருகிறார்; உங்களுக்கு மகிமையை உண்டாக்கக்கூடிய அவருடைய புகழ்ச்சியை பெற்றுக்கொள்வதற்கு எந்த ஒரு முயற்சியும் செய்யாமல், அவரை விசுவாசிக்கிறோம் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்? வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நமக்குள் தேவன் கொடுத்திருக்கின்ற மகிமையைத் தேடும் உணர்வினை திருப்திப்படுத்துவதற்கு “அவருடைய குமாரரும் குமாரத்திகளும்” – ஆக மகிமையுடன் வாழக்கூடிய வாழ்க்கையை கிறிஸ்தவர்களுக்கு அவர் தருகின்றார். *2 கொரி. 6:18.* இருந்தும் மக்கள் நம்பிக்கை அற்றவர்களாக நிறைவான மகிமையைப் பெற்றுக்கொள்ள மனிதர்களையே நாடுகிறார்கள். இதனால் தான் இயேசு “நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?” என்று கேட்டார்.

மனுக்குலத்தை தேவன் படைத்ததற்கான நோக்கத்தை நிறைவு செய்யும்படியாகவே அவர் உடன்படிக்கைகளை தந்திருக்கின்றார். எபிரெயர் 11ஆம் அதிகாரத்தில் உள்ள விசுவாச மக்களின் பட்டியலைப் பாருங்கள். ஆதாமின் குமாரன் ஆபேல் முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் வரை இந்தப் பட்டியலில் பார்க்கலாம். அவர்கள் தேவனுடைய உடன்படிக்கை மீது விசுவாசம் உள்ளவர்களாய் இருந்து வந்தார்கள். தங்களை படைத்ததற்கான நோக்கத்தை அவர் அறிந்தவராய் தங்கள் தேவைகளை நிறைவுசெய்ய உடன்படிக்கைகளை தருகின்றார் என்று அவர்கள் நம்பினார்கள். *மத்தேயு 6:25-34.* இந்தப் பூமிக்குரிய சரீரத்தில் நன்மை, தீமை அறிந்தவர்களாய் வாழ்வது உபத்திரவம் மிக்கது என்று அவர்கள் புரிந்துகொண்டார்கள். அவர்களுக்கு மரணம் நிச்சயம்





என்பதையும் அறிந்திருந்தார்கள். *ஆதி. 2:17; 1 கொரி. 15:22.* இதன் காரணமாக, அவர்கள் தங்கள் விசுவாசத்தை உயிர்த்தெழுதலின் மீதும் ஆவிக்குரிய புதிய சரீரத்தின் மீதும் “நீதி வாசமாயிருக்கும்” புதிய வானம் மற்றும் புதிய பூமி மீதும் வைக்கவேண்டியது அவசியம் என்பதையும் அறிந்துகொண்டார்கள். *அப். 4:2; 1 கொரி. 15:42-44; 2 பேதுரு 3:11-13* பார்க்கவும். அவர்கள் தேவனுடன் சமூக அங்கீகாரத்தையும் தங்களுக்குள் சமாதானத்தையும், இயேசு கிறிஸ்து மறுபடியும் பரலோகத்திலிருந்து வெளிப்படும்போது மகிமையையும் கனத்தையும் நிறைவாய் பெற்றுக்கொள்வோம் என்று நம்பினார்கள். *யோ. 14:1-14; ரோ. 2:6-11; 1 பேதுரு 1:7; 1 யோவான் 3:1-3* பார்க்கவும். தேவனுடைய உடன்படிக்கைகள் மீது மனுக்குலம் விசுவாசம் வைப்பதால், தேவன் ஏற்றுக்கொள்ளுகின்ற நீதியைப் பெற்றுக்கொள்ளமுடியும். பரிசுத்தமும், நீதியும் உள்ள தேவன் அழுக்கான கந்தையைப் போன்ற நீதியை உடைய மக்களோடு உடன்படிக்கைகள் மூலமாகவே ஐக்கியம் கொள்கின்றார். *ஏசாயா 64:6; ரோமர் 3:21-26.*

ஆபிராம் காலத்தில் இருந்த நெருக்கடியான சூழ்நிலையே நோவாவின் காலத்திலும் இருந்தது. விசுவாசமுள்ள மக்களைக் காப்பாற்ற தீவிரமான நடவடிக்கையை மேற்கொண்ட பின்பு, மாம்சமானவைக –ளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்று எல்லா மக்களோடும் உடன்படிக்கை செய்துகொண்டார். *ஆதி. 9:8-17.* தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளமாக அவருடைய வில்லை மேகத்தில் வைத்தார். தேவன் தம்முடைய உடன்படிக்கைகளை காத்துக் கொள்வதில் உண்மையுள்ளவராக இருக்கின்றார். அவைகளின் பொருட்டு, தமது குமாரனை சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து தான் தமது மக்களை பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் காப்பாற்றவேண்டும் என்ற போதிலும், அதைச் செய்ய அவர் தயங்கவில்லை. *மத்தேயு 26:42; ரோமர் 3:3,21-26.* தமது ராஜ்யத்தை மனப்பூர்வமாய் புறக்கணிக்கும் மக்களிடமிருந்து தமது மக்களை காப்பாற்றுவதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராய் இருக்கிறார். *எபிரெயர் 12:28,29.* ஆகையால், நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்றுவதற்கு தேவன்

நடவடிக்கை எடுத்தது போலவே, ஆபிராமுடைய விசுவாசத்தின் அடிப்படையில் உறுதியான முடிவை எடுத்தார். அவர் ஆபிராமையும், சாராயையும், லோத்தையும் அவர்களுடைய நண்பர்களையும் குடும்பங்களையும் விட்டுப் பிரித்தெடுத்தார். அப்படிப் போலவே, தேவன் ஆபிரகாமோடே செய்துகொண்ட உடன்படிக்கைகள் மூலமாக பூமியில் உள்ள மற்ற மக்களை விட்டு "இஸ்ரவேலின் காணியாட்சிக்கு" உட்பட்டவர்களைப் பிரித்தெடுத்தார். அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய நடவடிக்கையை சபைக்கு விளக்கினான்:

*ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள், அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும்,* **வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு** *அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். எபேசியர் 2:11,12.*

இஸ்ரவேலர்களை பொறுத்தவரையில், இந்த உலகில் உள்ள மற்ற அனைவருமே தனி இனத்தைச் சேர்ந்தவர்கள், கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ள "புறஜாதிகள்" என்ற வார்த்தை இதையே குறிக்கின்றது. இந்த சரீர சம்பந்தமான பாகுபாடு ஆதி. *12:1-3* வசனங்கள் சொல்லப்பட்ட காலந்தொடங்கி, *அப்போஸ்தலர் 10:48*-இல் கொர்நேலியுவையும் அவன் வீட்டாரையும் தேவன் ஏற்றுக்கொண்ட காலம் வரை நீடித்தது, தேவன் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் செய்துகொண்ட உடன்படிக்கை வலுப்பெற்றதை பின்வரும் சரித்திர நிகழ்வுகள் விளக்குகின்றன. தயவு கூர்ந்து வசனங்களை வாசியுங்கள். ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்த காலம் முதல் இந்த உடன்படிக்கை வளர்ச்சியடைய ஆரம்பித்தது.





**ஆதி. 12:1-3**

ஆபிரகாமுக்கு சாராள் மூலம் பிறக்கும் மகன் ஈசாக்கின் சந்ததி ஒரு தேசமாக வளர்ச்சிப் பெறும் என்பதே இந்த உடன்படிக்கை. ஈசாக்குடைய இரண்டாம் மகனாகிய யாக்கோபுக்குப் பிறந்த 12 பிள்ளைகளின் சந்ததிகள் பெருகிய போது இந்தப் புதிய தேசம் செயல்படத் தொடங்கியது. "தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய்" விசுவாசித்ததால், சரீரப் பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஆசீர்வதிக்கப்பட்டான். *ரோமர் 4:21.* தேவனோடு ஆபிரகாமுக்கு இருந்த உறவை புரிந்து கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள், புரிந்துகொள்ளாதவர்கள் சபிக்கப்பட்டார்கள். *ஆதியாகமம் 15:1.*

**ஆதி. 13:14-17**

மிகுதியான சந்ததிகளும், மிகப்பெரிய நிலப்பரப்பும், உயர்ந்த அந்தஸ்தும் இந்த உடன்படிக்கையில் அவனுக்கு வாக்குக் கொடுக்கப்பட்டன.

**ஆதி. 15:4,5**

ஆபிராம் சாராய் மூலம் பெற்றுக்கொள்ளும் மகனே சுதந்தரவாளியாயிருப்பான் என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. அவர்கள் வயது முதிர்ந்தவர்களாய் இருந்த போதிலும் இது நடந்தது. அவர்களுடைய சந்ததி வழியாக மிகுதியான எண்ணிக்கையில் மக்கள் உருவாவார்கள் என்று சொல்லப்பட்டது.

**ஆதி. 15:13**

இஸ்ரவேலர் நானூறு வருடம் எகிப்திலே உபத்திரவப்படுவார்கள் என்ற விஷயம் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தப்பட்டது. ஆயினும், எமோரியருடைய அக்கிரமம் நிறைவான பிற்பாடு, இஸ்ரவேலர் நாலாம் தலைமுறையிலே கானான் தேசத்துக்குத் திரும்ப வருவார்கள். எகிப்தியர்களும் தண்டிக்கப்படுவார்கள்.

**ஆதி. 17:1-3**

சர்வ வல்லமையுள்ள தேவன் ஆபிராமுடைய விசுவாசத்தின் அடிப்படையில் தமது வாக்குத்தத்தத்தை இந்த வசனத்தில் மறுபடியும் உறுதிபண்ணுகிறார். ஆபிரகாம் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவனாக நடந்து கொண்டதால், அவர் இதை அவ்வப்போது உறுதிபடுத்திக் கொண்டார். அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். *ஆதி.15:6.*

**ஆதி. 17:4-8**

தேவன் ஆபிராமை "திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக" ஏற்படுத்தினபடியால், அவன் பெயர் ஆபிரகாம் என்று மாற்றப்பட்டது. ஆபிரகாமுடைய சந்ததிகளுக்காகச் செய்யப்பட்ட உடன்படிக்கையில் கானான் தேசம் முழுவதும் "நித்திய சுதந்தரமாக" கொடுக்கப்பட்டது.

**ஆதி. 17:9-14**

மாம்ச விருத்தசேதனம் ஒரு விசேஷித்த உடன்படிக்கையாக இருந்தது. இது இஸ்ரவேலர்களின் எல்லா ஆண்களுக்கும், வேலைக்காரர்களுக்கும் சொல்லப்பட்டது. இது தேவனுக்கும், ஆபிரகாமுக்கும் இடையிலான உடன்படிக்கையின் அடையாள மாக இருந்தது. விசுவாசத்தினால் நீதிமானாக்கும் உபதேசத்தின் அடிப்படையில், தேவனுடைய பார்வையில் யாரெல்லாம் நீதியுள்ளவர்களாகத் திகழ்ந்தார்களோ, அவர்கள் எல்லாருக்கும் இது ஒரு விசேஷித்த அடையாளமாயிருந்தது. விருத்தசேதனம் ஒரு முத்திரையாக இருந்ததே தவிர, இதனால் எவர் ஒருவரும் நீதிமானாக்கப்படவில்லை. தேவனுடைய உடன்படிக்கை மீது கொண்ட விசுவாசத்தினால் ஏற்கனவே நீதிமான்களாக்கப் பட்டவர்களுக்கு இது முத்திரையாக இருந்தது. *ரோமர் 4:6-11.*





**ஆதி. 17:15-17**

தேவன் சாராயை ஜாதிகளுக்குத் தாயாக மாற்றினதினால், அவள் பெயர் சாராள் என்று மாற்றப்பெற்றது. ஆபிரகாமினால் அவள் ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள். இந்தத் தம்பதிக்குப் பிள்ளை இல்லாதிருந்தது. ஆனால் "தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்" என்று நம்பினார்கள். *ரோ.4:18-25.* கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய உடன் படிக்கையை மட்டும் விசுவாசிப்பதில்லை, அவர் வாக்குக்கொடுப் பதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்றும் விசுவாசிக்கிறோம்.

**ஆதி. 17:17-19**

தேவன், ஆபிரகாமுக்கு சாராள் பெற்ற குமாரனாகிய ஈசாக்குக்கும் அவன் சந்ததிக்கும் தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பதாக சொன்னார். *ஆதி. 26:2-6,24.* இதே உடன்படிக்கை ஆபிரகாம் பெற்ற மற்ற பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆபிரகாமுக்கு ஆகார் பெற்ற குமாரனாகிய இஸ்மவேல் 12 பிரபுக்களை பெறும்படியாகவும் பெரிய ஜாதியாகும்படியாகவும் ஆசீர்வதிக்கப்பட்டான்; ஆயினும், அவனோடு தேவன் நித்திய உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வில்லை. *ஆதி. 16:7-15; 17:20-23.*

**ஆதி. 22:1-14**

தேவன் ஆபிரகாமிடம், அவன் மகன் ஈசாக்கை தகனபலியாக பலியிடச் சொல்லி அவன் விசுவாசத்தை சோதித்தார். ஆபிரகாம் தன்னுடைய குமாரனைக் கொல்லக் கத்தியை எடுக்கும் அளவுக்கு விசுவாசத்தில் உறுதியாயிருந்து சோதனையை ஜெயித்த படியினால், தேவனுடைய தூதன் வானத்திலிருந்து அவனை அழைத்து, அவனோடு தேவன் பண்ணியிருந்த உடன்படிக் கைகளின் வாக்குத்தத்தங்களை மறுபடியும் உறுதிபடுத்தினான். *ஆதி. 22:15-18.* விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே கூட

முயற்சி செய்து, கிரியைகளினாலே விசுவாசம் **பூரணப்பட்டதென்று** யாக்கோபு ஆபிரகாமுடைய விசுவாசத்தை விளக்கிச் சொல்லுகிறான். "அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். ஆதலால் மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியை களினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண் கிறீர்களே. *யாக்கோபு 2:22-24.* "ஆவிக்குரிய வாழ்க்கைப் பெட்டிக்குள்'' அடைக்கப்பட்டிருக்கின்ற தேவ பிள்ளைகள் "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாய்" இருக்கிறார்கள்.

**ஆதி. 28:10-15**

தேவன் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும் பண்ணின உடன்படிக்கையை ஈசாக்குடைய இரண்டாம் மகன் யாக்கோபுக்கு மறுபடியும் உறுதிபண்ணினார்.

**ஆதி. 32:22-30**

யாக்கோபு பதான் அராமை விட்டுத் தன் பெரிய குடும்பத்தோடு புறப்பட்டான். பெத்தேலை நோக்கி அவன் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தபோது, ஒரு ''புருஷன்'' இவனை சந்தித்தார். அவர் இவன் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார். "அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்." *ஆதி. 32:28.*

தேவன் எகிப்திலிருந்து சரீரப்பிரகாரமான இஸ்ரவேலரை விடுவிக்கும்படி மோசேயை அனுப்பின காலத்தில், ஆபிரகாமுடைய சந்ததியில் விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தவர்களில் அநேகர் உயிருடன் இல்லை. தேவன் யாக்கோபுடைய பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினது முதல் சரீரப் பிரகாரமான இஸ்ரவேலர் "காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும்" கீழ்ப்பட்டிருக்கவேண்டும் என்று அவர் முடிவு செய்திருந்த காலம்வரைக்கும் ஆபிரகாமுடைய சந்ததியை மையமாக





வைத்து அவர் என்ன செய்துகொண்டிருந்தார் என்பதை பின்வரும் வசனங்கள் விளக்குகின்றன. *கலாத்தியர் 4:1-5.*

**ஆதி. 45:4-7**

''பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்" என்று யோசேப்பு தன் அடிமைத்தன வாழ்க்கையை குறித்துப் பேசினான்.

**ஆதி. 46:2-4**

''அன்று இரவிலே தேவன் இஸ்ரவேலுக்குத் தரிசனமாகி: யாக்கோபே, யாக்கோபே என்று கூப்பிட்டார்; அவன் இதோ, அடியேன் என்றான். அப்பொழுது அவர்; நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன்; நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்படவேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன். நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்; நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன்; யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான் என்று சொன்னார்."

**யாத். 4:22**

தேவன் ஆபிரகாமோடே உடன்படிக்கைகள் பண்ணி 430 வருடங்கள் கழித்து, எகிப்திலிருந்து மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரை விடுதலைபண்ணுவதற்கு மோசேயை அனுப்பினார். *யாத்திராகமம் 3:7-10; 6:2-8; கலாத்தியர் 3:17.* தேவன் பார்வோனோடே தெரிவிக்கச் சொன்ன செய்தி இது: "அப்பொழுது நீ பார்வோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்ட புத்திரன், எனக்கு ஆராதனை செய்யும்படி **என் குமாரனை அனுப்பிவிடு** என்று கட்டளையிடுகிறேன்." *22, 23 வசனங்கள்.*

**யாத். 19:5,6**

தேவன் பார்வோனுடைய சேனையை அழித்துவிட்டு, இஸ்ரவேலரை விடுதலைபண்ணின பிற்பாடு, அவர்கள் சீனாய் வனாந்திரத்தில் பாளையமிறங்கினார்கள். *யாத். 14:21,22,26.* தேவன் மலை மீது மோசேயை அழைத்து இஸ்ரவேலருக்காக இந்த உடன்படிக்கையை கொடுத்தார். "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு **ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய்** இருப்பீர்கள்.

**யாத். 32:1-4**

மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கி வருவதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் புத்திரர் இந்த உடன்படிக்கையை மீறிவிட்டார்கள். அவர்கள் ஏற்கனவே மோசேக்கும், தேவனுக்கும் விரோதமாக முறுமுறுத்துக்கொண்டிருந்தார்கள். தொடர்ந்து 40 ஆண்டுகளாகவும் முறுமுறுத்து வந்தார்கள். *யாத். 14:10-12; 16:2,3.*

இஸ்ரவேலர்கள் செய்த கலகம் மற்றுமொரு நெருக்கடியான சூழ்நிலையை உண்டாக்கியது. இதன் காரணமாக தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் பிள்ளைகளை உருவாக்குவதற்கென்று அவர் மற்றொரு பிரதான நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. *எபிரெயர் 2:10.* அவர் ஆசாரியத்துவ முறைமையை மாற்றினார். இதன் விளைவாக உடன்படிக்கையும் பிரமாணமும் மாறின. *எபி. 7:12.* மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமைக்குப் பதிலாக லேவி ஆசாரியத்துவ முறைமையை கொடுத்தார். தேவன் மோசேயைக் கொண்டு கொடுத்த பிரமாணத்தின் வெளிப்படையான நோக்கம் என்னவென்றால், **இஸ்ரவேல் மக்களின் பாவங்களை குற்றப்படுத்துவது** தான். *ரோமர் 3:19,20.* மேலும், அவர் தமது மக்களோடு ஐக்கியங்கொள்ளும் விதத்தையும் இது மாற்றிவிட்டது. ஆனால் அவர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபோடு செய்துகொண்ட உடன்படிக்கையை **இது மாற்றவில்லை**.





*ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே. ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டுத் தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப் பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது. அன்றியும், சுதந்தரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத்தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச்செய்தாரே. அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவ தூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. கலாத்தியர் 3:16-19.*

மோசே முதல் கிறிஸ்து வரை வாழ்ந்த தேவனுடைய "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்" அவர் ஆபிரகாமோடே செய்துகொண்ட உடன்படிக்கைளின் மீது விசுவாசம் உள்ளவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். லேவி ஆசாரியத்துவ காலத்தில் புதிய உடன்படிக்கைகளும் கொடுக்கப்பட்டன. இந்த உடன்படிக்கைகள் மீதும் இஸ்ரவேலர்கள் விசுவாசம் வைக்க வேண்டியிருந்தது. *உபாகமம் 28:1,2; 29:1.* இந்த ஆசாரியத்துவமும், உடன்படிக்கைகளும், பிரமாணங்களும், ஒரு விடுதியில் தங்கும் பிள்ளைகளை அதின் காப்பாளர் எப்படி பாதுகாத்து வழிநடத்துவாரோ, அப்படிப்போல மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரை வழி நடத்திவந்தன. *ரோமர் 10:5; எபிரெயர் 7:11.* மோசேயின் காலந்தொடங்கி, இயேசு பரமேறிச் சென்ற பின் வந்த பெந்தெகொஸ்தே நாள் வரைக்கும் இந்த ஆசாரியத்துவத்தை தேவன் பயன்படுத்தி வந்தார். "கிறிஸ்துவுக்குள்ளான ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தையும்" குறித்தே சுதந்தரம் என்னும்

அர்த்தத்தில் ஆபிரகாமுடைய **"வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளுக்கு"** தேவன் வாக்குத்தத்தம்பண்ணினார், இன்றும் வாக்குத்தத்தம் பண்ணு கிறார். *எபேசியர் 1:3.* "அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்." *எபிரெயர் 6:17.* ஆபிரகாமோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கை யிலிருந்து கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கும் சுதந்தரமானது, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கு தேவனுடைய பிள்ளைகளென்ற முழு உரிமையையும் கொடுக்கின்றது. தயவுகூர்ந்து வாசியுங்கள். *கலாத்தியர் 4:1-7.* இன்றைக்கு இருக்கும் தேவனுடைய சபையைப் போலவே, ஆபிரகாம் முதல் கிறிஸ்து வரையிலும் வாழ்ந்த "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளும்" உண்மையான "தேவனுடைய இஸ்ரவேலராய்" இருந்தார்கள். *கலா. 6:16.* லேவி ஆசாரியத்துவ காலத்திலும் கூட தேவன் தமது மக்களாய் இருக்கும்படி மீதியாயிருந்தவர்களைத் தேர்ந்தெடுத்தார். இவர்களே ஆவிக்குரிய இஸ்ரவேலராய் இருந்தார்கள். *ரோமர் 9:11,27.* இன்றைக்கு மீதியாயிருக்கிற ஆவிக்குரிய ஜனங்களும் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களும் யாரென்றால், தேவனுடைய சபையைச் சேர்ந்தவர்கள் தான். *ரோமர் 11:5; 1 பேதுரு 1:1,2.*

மோசேயின் நியாயப்பிரமாணம் மற்றும் லேவி ஆசாரியத்துவம் ஆகியவற்றின் மதிப்பை எட்டாம் பாடத்தில் இன்னும் அதிகமாய் ஆராய்ந்து அறிந்துகொள்வோம். இஸ்ரவேலர் ஆவிக்குரிய வாழ்க்கையில் எவ்வளவாய் சீரழிந்து போனார்கள் என்பதை கவனித்தால், அவர்கள் எப்பேர்ப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் இருந்தார்கள் என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடியும். அவர்கள் கானான் தேசத்துக்குப் பிரயாணம்பண்ணிக்கொண்டிருந்த ஒரு சமயத்தில், தேவன் மோசேயைப் பார்த்து இப்படிச் சொன்னார்: "இந்த ஜனங்களைப் பார்த்தேன்; அது வணங்காக் கழுத்துள்ள ஜனம். ஆகையால், நான் அவர்களை அழித்து, அவர்கள் பேரை வானத்தின் கீழ் அற்றுப்போகப் பண்ணும்படி நீ என்னை விட்டுவிடு; அவர்களைப் பார்க்கிலும் உன்னைப் பலத்ததும் ஜனம்





பெருத்ததுமான ஜாதியாக்குவேன் என்றார்." *உபாகமம் 9:13-14.* இதில் வருத்தத்துக்குரிய விஷயம் என்னவென்றால், இஸ்ரவேலர் எகிப்து தேசத்தில் தற்காலிகமாக 400 ஆண்டுகள் வாசஞ்செய்த காலத்தில், அவர்களில் அநேகர் தங்கள் முற்பிதாக்களோடு தேவன் பண்ணியிருந்த உடன்படிக்கைள் மீது விசுவாசத்தை இழந்துவிட்டார்கள்.

இஸ்ரவேலருக்கு கானான் தேசத்தைச் சொந்தத் தேசமாகக் கொடுப்பதாய் வாக்குத்தத்தம்பண்ணியிருந்த தேவன், அதை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராய் இருந்தார். தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்களோடு பண்ணியிருந்த வாக்குத்தத்தத்தின் காரணமாகவே மோசே தேவனுடைய வல்லமையினால் இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டுவந்தான். தேவன் இஸ்ரவேல ருடைய முற்பிதாக்களோடு பண்ணியிருந்த உடன்படிக்கையை நிறைவேற்றும்படியாகவே 40 ஆண்டு காலமாக அவர்களுடைய நீதி, நேர்மை இல்லாத செயல்களைப் பொறுமையாய் சகித்துக்கொண்டார். *உபாகமம் 9:4-6.* ஆபிரகாம், சாராளுக்குப் பிறந்த சந்ததி மூலமாக உருவான மாபெரும் மக்கள் கூட்டத்தின் மத்தியில், தேவனுடைய மக்களையே "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்" என்ற சொற்றொடர் உண்மையாக அடையாளப்படுத்துகின்றது; இது ஒரு போதும் மாம்சத்துக் குரிய இஸ்ரவேலரை அடையாளப்படுத்தியதில்லை. *யோவான் 8:33-41.*

கிறிஸ்தவர்களாகிய நாம், நம்முடைய ஆவி தேவனிடமிருந்து வந்தது என்பதை புரிந்துகொள்கிறோம். *பிரசங்கி 12:7.* இந்த ஆவி நம்முடைய "உள்ளான மனிதனைக்" குறிக்கிறது. நாம் வாழ்ந்து வருகின்ற சுற்றுப்புற சூழ்நிலையைப் பொறுத்தே இந்த உள்ளான மனிதனுடைய பண்புகள் அமைந்திருக்கின்றன. உள்ளான மனிதன் ஆவிக்குரியவனாய் இருப்பதினால், தேவன் தமது நித்தியத்துக்குரிய காரியங்களில் மாம்சத்துக்குரிய இஸ்ரவேலருக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மற்ற மக்களுக்கு மரணம் வருவதைப் போலவே மாம்சத்துக்குரிய இஸ்ரவேலருக்கும் மரணம் வரும். விக்கிரக ஆராதனைக்காரரிடமிருந்து இஸ்ரவேலரை சரீரப் பிரகாரமாகப் பிரித்துவைப்பதற்கு கானான் தேசம்

பயன்பட்டது. மேலும், ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் இஸ்ரவேலருடைய சரீரப் பிரகாரமானத் தேவைகளை சந்திப்பதிலும் இந்தத் தேசம் பயன்பட்டது. இன்றைக்கு இருக்கும் இஸ்ரவேலரை ஆவிக்குரியபடி சுத்திகரிப்பதில், தேவன் மாம்சத்துக்குரிய இஸ்ரவேலருக்குக் கொடுத்திருக்கின்ற தேசத்துக்கு எந்தப் பங்கும் இல்லை. பரிசேயரும், சதுசேயரும் சரீரப்பிரகாரமாக ஆபிரகாமோடே தங்களை அடையாளப்படுத்தி தேவனுடைய பிள்ளைகள் என்று உரிமை கொண்டாடியதால், யோவான் ஸ்நானன் அவர்களை இவ்விதமாய் எச்சரித்தான்: "தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்." *மத்தேயு 3:9.*

தேவனுடைய மனதைப் பொறுத்தவரையில், ஆபிரகாமுடைய சந்ததியாரில் இன்றைக்கு விசுவாசம் உள்ளவர்களாய் மீந்திருப்பவர்கள் எவர்களோ, அவர்களே அவருடைய ஆவிக்குரிய சந்ததி என்ற அந்தஸ்தைப் பெறுகிறார்கள். *ரோமர் 11:5,6.* இன்றளவிலும் இது உண்மையாக இருக்கின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியா விலிருந்த சபைகளுக்கு எழுதிய நிருபத்தில் சாராளையும், ஆகாரையும் குறித்துச் சொல்லும் விஷயங்களை வாசிக்கும் போது, இதை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியும். பார்க்கவும் *கலா. 4:21-31.* ஆபிரகாம் முதல் இயேசுகிறிஸ்துவின் வருகை வரையிலும் "சூரியனுக்குக் கீழே" வாழும் தேவனுடைய மக்களை எந்தக் கொள்கையின் அடிப்படையில் அடையாளப்படுத்தமுடியும் என்பதை பின்வரும் வசனப்பகுதி தெரிவிக்கின்றது:

**தேவ வசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது;** *ஏனென்றால், இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும்* **இஸ்ரவேலரல்லவே.** *அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானா லும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படி யென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல,* **வாக்குத்தத்தத்தின்படி**





**பிள்ளைகளானவர்களே** *அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார் கள். ரோமர் 9:6-8.*

இந்தப் பாடத்தில் மீதமுள்ள பகுதி, யூதர் மற்றும் புறஜாதியார் என்ற வேறுபட்ட பின்னணிகளைக் கொண்ட கிறிஸ்தவர்கள், "**வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையில்**" எப்படி சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் புரியவைக்கின்றது. தமது பிதாவுக்காக இயேசுவானவர் தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி வாங்கின சபையானது "ஆவிக்குரிய இஸ்ரவேல்" என்று குறிப்பிடப்படுகிறது. விசுவாசமுள்ள இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாய் இருந்தது போலவே, கிறிஸ்தவர்களும் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாய் இருக்கின்றனர். *அப்போஸ்தலர் 20:28; ரோமர் 11:26; பிலிப்பியர் 3:2-4,20,21; 1 தெசலோனிக்கேயர் 2:13,14.* இயேசு கிறிஸ்துவின் இரத்தத்துக்குள்ளானது புதிய உடன்படிக்கை. *மத்தேயு 26:28.* "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்பண்ணியிருந்தார். *ஆதியாகமம் 12:3.* நிச்சயமாய் விசுவாசியின் நடக்கை சோதிக்கப்பட்ட பிற்பாடு "பூரணமாக்கப்பட்ட" தூய்மையான விசுவாசத்தோடு தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். *யாக்கோபு 2:22; 1 பேதுரு 1:6-9.* யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இடையில் தேவன் ஏற்படுத்தியிருந்த பிரிவினை நிரந்தரமானது அல்ல என்று ரோமாபுரி யிலுள்ள பரிசுத்தவான்களுக்கு பவுல் விவரித்துச் சொன்னான். *தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையா யிருந்தாரானால் உனக்கென்ன? அவர் யூதரிலிருந்து மாத்திர மல்ல, புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே. அந்தப்படி: எனக்கு ஜனங்களல்லாதவர்களை என்னுடைய ஜனங்கள் என்றும், சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப் பட்டவள் என்றும் சொல்லி அழைப்பேன். நீங்கள் என்னுடைய*

*ஜனங்களல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள்* **ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள்** *என்னப்படுவார்கள் என்று ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருக்கிறது. ரோமர் 9:22-26.*

இப்பொழுது நாம் கேட்கவேண்டிய கேள்வி இதுதான்: "மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரும், புறஜாதிகளும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளாகவும், தேவனுடைய வாக்குத்தத்தத்துக்கு சுதந்திரவாளிகளாகவும் ஆவது எப்படி?" கிறிஸ்தவர்களுடைய "அதிபதியாகவும் இரட்சகராகவும்" பிதாவின் வலது கரத்தினால் இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்ட பிற்பாடு, ஆசாரியத்துவமும், நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. *அப்போஸ்தலர் 5:31; எபிரெயர் 7:12.* இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக புதிய உடன்படிக்கை கொடுக்க தேவன் ஆயத்தமானார். *மத்தேயு 26:28.* இந்த உடன்படிக்கைக்குக் கீழ்ப்படியும் விசுவாசிகளின் மனச்சாட்சியிலிருந்து குற்ற உணர்வை நீக்குவதற்கு ஒரு பாவநிவாரண பலி அவசியமாயிருந்தது. *எபிரெயர் 10:1-4.* இந்நேரத்திலும், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் கொள்ளுமளவிற்குக் குற்றஞ்சாட்டப்படாதவர்களாய் அவர்கள் வாழ்கிறார்கள். *அப்போஸ்தலர் 5:32.* இதைக் குறித்து நாம் பிறகு படிக்கலாம். "எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார்" என்பதை இந்நேரத்தில் சொல்லி ஆகவேண்டும். *ரோமர் 11:32.* புறஜாதிகளுக்கு **விசுவாசத்தின் கதவு** திறக்கப்படுவதற்கு இதுவே காரணமாய் இருந்தது. *அப்போஸ்தலர் 11:18; 14:27.* இயேசுவை ஏற்றுக்கொள்ளாமற்போன யூதர்களுக்கு **விசுவாசத்தின் கதவு** திறக்கப்படுவதற்கும் இதுவே காரணமாய் அமைந்தது. *ரோமர் 10:11-13.* இப்படியாக இது நடந்தேறியது.

*நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம்*





*பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். கலாத்தியர் 3:26-29.*

"இருதிறத்தாரையும் தமக்குள்ளாக (இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக) ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் (யூதர்கள், புறஜாதிகள்) ஒரே சரீரமாக" தமக்கு ஒப்புரவாக்குவார் என்று தேவன் வாக்குத்தத்தம்பண்ணியிருந்தார். *எபேசியர் 2:15,16.* தேவனுடைய ஆசீர்வாதம் எல்லா தேசத்து மக்களுக்கும் வருவது எப்படி என்பது பல நூற்றாண்டுகளாக இரகசியமாகவே இருந்தது; ஆனால் இதற்கான பதில் தனக்குத் தெரியும் என்று பவுல் கூறுகிறான். *எபேசியர் 3:3.* அது இது தான்:

*அதென்னவெனில், புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய்,* **கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு** *உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்ளென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். எபேசியர் 3:3.*

இவ்விதமாக இன்று தேவனுடைய மக்களாய் இருப்பவர்கள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாகவும் இருக்கின்றார்கள். நாம் புதிதாகப் பிறக்கும்போது கிறிஸ்துவைத் தரித்துக்கொள்கிறோம். இதனால் நாம் ஆபிரகாமின் பிள்ளைகள் ஆகின்றோம். அதே வேளையில், மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவை தரித்துக்கொள்ளுகிறதினால், தேவனுடைய பிள்ளையாகவும் ஆகின்றான். மரியாள் மூலமாக மாம்சத்தில் அவதரித்த நசரேயனாகிய இயேசுவானவர் தேவனுடைய குமாரனாய்

இருக்கும் போதே ஆபிரகாமுடைய சந்ததியாகவும் இருக்க முடிந்தது எப்படியோ, அப்படியாகவே கிறிஸ்தவர்களுக்கும் சாத்தியமாகின்றது. கிறிஸ்துவுக்குள்ளான சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொள்ளும்படி தேவன் கிருபைபாராட்டியிருக் கின்றார். தேவன் ஆபிரகாமோடே செய்து கொண்ட உடன்படிக்கை மூலமாக நமக்குக் கிடைக்கும் சுதந்தரம் இதுதான். நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் அந்த சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளும் வரையிலும் "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாகவே" நீடித்திருக்க வேண்டும். *1 பேதுரு 1:3-5.* வரப்போகும் பாடங்களில் இதை நாம் விவரமாக அறிந்துகொள்வோம்.